சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ்.111 /2020

2023 ம் ஆண்டு **04.12.2023** ம் தேதி மாயவன்

என்பவரின் சாட்சியாகிய வாசா 2 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற Grade II Bench Clerk திருமதி.எம்.தெய்வானை என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாயவன் | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | நடராஜ் | சமயம் | இந்து |
| கிராமம் | பொள்ளாச்சி | வயது | 47 |

முதல் விசாரணை

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது ஆதார் அட்டை ஒளி நகல் தாக்கல் செய்கிறேன் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). அது **வாசாஆ 8** ஆகும். பொள்ளாச்சி காந்திநகர் என்ற விலாசத்தில் வசித்து வந்த ராஜன் என்பவர் எழுதிய உயிலை பொருத்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். உயிலை ராஜன் 20.10.2016 தேதியில் எழுதி வைத்தார். அந்த உயிலில் முதலாவதாக நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். இரண்டாவதாக சாட்சி கையெழுத்திட்டவர் பி.பாலசுப்பிரமணியம் என்பவர் ஆவார். நான் 20.10.2016 தேதி ராஜன் அவர்கள் வீட்டிற்கு அவரின் அழைப்பின் பேரில் சென்றபோது அங்கு ராஜன், பாலசுப்பிரமணியம் மற்றும் வழக்கறிஞர் கே.சக்தி என்பவரும் இருந்தார்கள். ராஜன் தனக்கு குழந்தை இல்லாததால் அவரது தம்பியான சண்முகம் பெயரில் உயிலை எழுதி வைக்க உள்ளதாக கூறி அந்த உயிலை என்னிடமும் இன்னொரு சாட்சியான பாலசுப்பிரமணியத்திடமும் கொடுத்து படிக்க சொன்னார். நாங்கள் அதை படித்தோம். அப்போது மேற்படி உயிலை தயாரித்தவரான

வழக்கறிஞர் சக்தி உடனிருந்தார். அதை நாங்கள் படித்து பார்த்தபின் ராஜனும் படிக்க கேட்டு உயிலில் கண்ட வாசகங்கள் தனது விருப்பத்திற்கு ஏற்ப சரியானதாக உள்ளதாக உறுதி கூறி எங்கள் முன்னிலையில் அந்த உயிலின் ஒவ்வொரு பக்கதிலும் தனது கைரேகையை சுய விருப்பத்தின் பேரில் மேற்படி ராஜன் கைரேகை வைத்தார். அதன் பின்னிட்டு நான் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டேன். இரண்டாவது சாட்சியாக பாலசுப்பிரமணியம் கையெழுத்து செய்தார். சாட்சி கையெழுத்திட்ட பின் மேற்படி உயில் ஆவணத்தை தயாரித்த வழக்கறிஞர் சக்தி தனது கையெழுத்தினை மேற்படி உயிலில் கையொப்பம் செய்தார். அந்த உயிலில் எங்கள் மூவர் முன்னிலையில் தான் மேற்படி ராஜன் தனது கைரேகையை பதித்து உயிலை ஏற்படுத்தினார். அவர் அவ்வாறு கைரேகை வைத்ததை நாங்கள் மூவரும் பார்த்தோம். அதன் பின் நான் சாட்சி கையெழுத்திட்டபோது அப்போது அங்கு இருந்த ராஜனும் சாட்சி பாலசுப்பிரமணியமும் வழக்கறிஞர் சக்தி ஆகிய மூவரும் பார்த்தனர். அதைப்போன்று இரண்டாவது சாட்சியான பி.பாலசுப்பிரமணியம் உயிலில் கையெழுத்திட்டதை நான், ராஜன் மற்றும் வழக்கறிஞர் சக்தி ஆகிய மூவரும் பார்த்தோம். மேற்படி உயிலை தயாரித்தவரான வழக்கறிஞர் சக்தி கையெழுத்திட்டதை ராஜன், மற்றும் உயிலில் கண்ட இரு சாட்சிகளான நானும், பி.பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் பார்த்தோம். மேற்படி உயிலில் உள்ள கைரேகை எங்கள் முன்னிலையில் ராஜன் அவர்கள் 20.10.2016 ம் தேதியில் வைத்ததுதான் மேற்படி உயிலும் அவரால் எங்கள் முன்னிலையில் மனப்பூர்வமாக எழுதி வைத்ததுதான். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணமான வாசாஆ 4 ல் ராஜன் அவர்கள் எழுதி வைத்த உயில் தான் ஆகும். அதில் மேற்படி அந்த ஆவணத்தில் 1 வது சாட்சியாக நான் கையெழுத்திட்டுள்ளேன். உயிலை எழுதி வைத்த முழு விபரமும் தெரியும் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் டிப்ளமோ படித்துள்ளேன். உயில் எழுதி வைத்த ராஜன் நல்ல நினைவுடன் தான் இருந்தார். நான் ராஜன் வீட்டிற்கு செல்லும்போது ராஜன் சாட்சி பாலசுப்பிரமணியம் வழக்கறிஞர் சக்தி ஆகியோர் இருந்தனர். ராஜன் குடும்பத்தை பற்றி நேரடியாக தெரியும் என்றால் தெரியும். அவர் எனது வீட்டிலிருந்து 2 வீதி தள்ளி குடியிருந்து வந்தார். உயிலில் எல்.டி.ஐ.ஆப் ராஜன் என்று எழுதியது நான் தான். வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி